# வேதாத்திரி மகரிஷியின் பெண்ணின் பெருமை

***வே. சுபத்திரா தேவி**
முனைவர் பட்ட ஆய்வாளர், யோகமும் மனித மாண்பும் துறை,
WCSC - VISION SKY ஆராய்ச்சி மையம், ஆழியாறு. பொள்ளாச்சி 642101.
தமிழ்நாடு.
**** முனைவர். க. சுமதி**
இணைப்பேராசிரியர், யோகமும் மனித மாண்பும் துறை
WCSC- VISION SKY ஆராய்ச்சி மையம், ஆழியாறு. பொள்ளாச்சி 642101. தமிழ்நாடு.

**ஆய்வு சுருக்கம்:**

இறைவனின் கருவறையில் இறுதியாகப் பூத்த மனித இனத்தின் ஒரு தெய்வீக படைப்பே பெண்கள். இவர்கள் மனிதப்பிறவியின் மகத்துவம் கொண்டவர்கள். பிரபஞ்சத்தின் ஆணிவேராகவும், தயவின் தாயகமாகவும், தாய்மையின் பிறப்பிடமாகவும் வாழ்ந்து அன்பெனும் நூலால் அனைவரையும் இணைத்துக் கொள்ளும் மேன்மை பொருந்தியவர்கள். .பெண் என்பவள் பெருமதிப்பு மிக்கவள். கண் இல்லையேல் காட்சி இல்லை. அது போல பெண் இன்றி எதுவும் இல்லை. ஏனெனில் அனைவருமே "பெண்ணினத்தின் அன்பளிப்பு". அனைத்து உயிர்களும் தோன்றுகின்ற தெய்வீகத் திருவாயிலாகவும், இறைநிலையின் பேரறிவுத் தன்மையைக் கொண்ட இயற்கையின் ஒளிச்சுடராகவும் விளங்குபவர்கள் பெண்களேயாம். ஆண்களை முழுமையாக்குகின்ற மறுபாதியாக பெண்களும், பெண்ணினத்தினை முழுமைப்படுத்துவது ஆண்களாக இருப்பினும் அந்த ஆண்களைப் பெற்றெடுத்த பெருமை பெண்களைச் சாரும். குடும்பப் பொறுப்பையும், கடமையையும் அதிகமாக சுமந்து கொண்டு, தியாக உணர்வோடு வாழ்ந்து வருகின்ற பெண்களைச் இச்சமுதாயம் இரண்டாம் தரக்குடிமக்களாகவே நடத்தி வருகிறது. அதனால் அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகள் பல. ஆகவே பெண்மையின் சிறப்பையும், பெருமையையும் அனைவரும் உணர்ந்து கொண்டு அவர்களைப் பாதுகாத்து பராமரித்து பெண்ணினத்தின் தேவைக்குத் தகுந்தவாறு வசதிகளை வழங்கி கடமையாற்றி வாழ்வதற்கு உதவும் வகையில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் எடுத்துரைத்துள்ள பெண்மையின் சிறப்பினை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**கலைச் சொற்கள்:**
வேதாத்திரி மகரிஷி, பெண்கள், பெருமை, குணங்கள், மதிப்பு.

## முன்னுரை:

மனிதகுலத்தினை அமைதியோடு நெறிப்படுத்தி வாழ்விப்பதற்காக அவ்வப்போது பல மகான்கள் தோன்றி உள்ளார்கள் .வேதாத்திரி மகரிஷி அவர்களும் தனி மனிதனாக

வாழ்ந்து தரணி போற்றும் மகானாக வாழ்ந்தவர் . வேதாத்திரியம் என்ற அரிய தத்துவத்தின் மூலம் மனிதகுல அமைதிக்கு தேவையான பல்வேறு நெறிமுறைகளை வகுத்துத் தந்துள்ளார்கள். அந்த வகையில் இயற்கையின் படைப்பில் மிகவும் உன்னதமான பல்வேறு பரிமாணங்களில் தாயாகவும், சகோதரியாக , மனைவியாக, மகளாக ஒவ்வொரு பருவத்திலும் அன்போடு உறவாடி அனைத்து சொந்தங்களுக்கும் அதிஷ்ட தேவதையாக குடும்பத்தில் தேங்கி நிற்கும் பெண்களின் சிறப்பினை எடுத்து இயம்பி அவர்களின் பெருமை உணர்ந்து போற்றிப் பாதுகாக்கும் விதமாக **வேதாத்திரி மகரிஷி** அருளியுள்ள **பெண்ணின் பெருமையை** எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

பெண்ணிண் சிறப்பு:

" **மங்கையராகப் பிறப்பதற்கே மண்ணில் மாதவம் செய்திட வேண்டுமம்மா"** என்கின்ற கவிமணியின் கனிமொழிக் கூறல் போல ஒப்பற்ற உயர்வான பிறவி பெற்றவர் பெண்கள். உதிரிப்பூக்களை இணைக்கின்ற நூற்போல இல்லத்தார்களை இணைக்கின்ற "தையலர்" என்ற பெருமையும் இவர்களுக்கு உண்டு. (**இளங்கதிர் பொதுக் கட்டுரைகள்**, **பக்** 63)

“ **அன்பில் அன்னையாகவும், ஆக்கத்தின் ஊற்றாகவும், இல்லத்தில் இனியவளாகவும், ஈடில்லாப் பிறவியாகவும் இருப்பவள் பெண். பண்பு கொண்ட மனையாளாக மாட்சிமை பொருந்தியவள்.**

**கண்ணின் மணிபோல, கனிகளின் சுவைபோல, கருணை கொண்டவளாக, கடமையில் வல்லவராக செயல்படுபவள்.**

**வலிமையில் பூவாய், வார்த்தையில் தூய்மையாய், பொறுமையில் பூமியாய், பாசத்தின் இருப்பிடத்தில் வீற்றிருப்பவள் பெண் ஆவாள்**”.

( **மனம் விட்டுப் பேசலாம் பக்** 59)

**வழிபாட்டு முறையில் பெண்ணின் சிறப்பு**:

“பெண்களின் சிறப்பினை உணர்த்தும் வகையில் பக்தியோக வழிபாட்டு முறையில் அம்பிகையை பல்வேறு பருவங்களாக அலங்கரித்து வழிபட்டு வருகின்றனர். முதலில் குழந்தையாக பாவனை செய்து வழிபடுகிறார்கள். குழந்தையானது எந்த ஒரு பொருளையும் சிறிது நேரம் விளையாடி விட்டு பிறகு அதனை எறிந்து தனது தாயிடம் போய் விடும். இதைப்போல் **பற்றற்ற குணத்தை** பெறவேண்டும் என்பதற்காக **பாலாவாக** சித்தரித்து வழிபாடு செய்து வருகிறார்கள்.

இரண்டாவதாக **அச்சம்**, **மடம்**, **நாணம்**, **பயிற்பு** போன்ற அனைவரையும் கவரும் அரிய குணங்களை உணர்த்தும் விதமாக **தருணியாக** வழிபடும் கன்னிப் பெண்ணின் பருவ வழிபாடு,

அடுத்ததாக **விட்டுக் கொடுத்தல், தியாகம், சகிப்புத் தன்மை, சரிசெய்து கொள்ளுதல், ஒத்துப்போதல்** போன்ற சிறந்த குணங்களைப் பெறும் வகையில் **சுமங்கலி** என்ற வடிவில் அம்பிகையை பாவித்து வழிபடுகிறார்கள்.

இதையடுத்து **சுவாஸினி** என்ற **வயதான சுமங்கலி** முறையில் வழிபாடு நடைபெறுகிறது. அதாவது **தாயாக பாவித்து** கும்பிடும் முறையாகும். தாயானவள் தனக்காக வாழ்பவள் அல்ல. தன் குழந்தைகளின் நலத்திற்காக வாழ்ந்து வருகின்ற கருணை கொண்ட சமுத்திரம். இந்த அன்புள்ளம் நமக்கும் வரவேண்டும் என்பதற்காக இவ்வழிபாட்டினையும் நம் முன்னோர்கள் அருளியுள்ளார்கள்."

மேற்கண்ட நான்கு வழிபாட்டு முறைகளும் மனிதனுக்கு நல்ல குணநலப்பேற்றினை உணர்ந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்ட வழிபாட்டு முறைகளாகும். இந்த குணநலன்களை நாம் பெற்று விட்டால் நாமும் அம்பிகையும் ஒன்றே, நாமும் அம்பிகையின் அம்சமே என்ற **திரிபுரா ரகசியம்** என்பதை உணர்த்துகிறது.(**மனவளக்கலைஞன் மாத இதழ், பக்** 2,5)

மனிதனாகப் பிறந்தவன் பெருமைமிகு பெண்ணினத்தை மதிக்க வேண்டும். கணவன் பொருளீட்டி வருவதால் மனைவியைக்காட்டிலும் உயர்ந்தவனாக எண்ணிவிடக் கூடாது. ஏனெனில் குழந்தைகளை கவனித்து, பெரியவர்களுக்கு கடமை செய்து, குடும்ப வேலையுடன், குடும்ப நிர்வாகத்தையும் சிறப்பாக செய்வதில் பெண்களின் பங்கு அதிகமாக இருந்து வருகிறது. ஆகவே பெண்ணினத்தின் பெருமையை உணர்ந்து என் குடும்ப நலனுக்காகவே வாழ்ந்து வருகின்ற பெண்ணிற்கு சிறப்பான அந்தஸ்துடன், சமமான உரிமையை அளித்து அவர்களின் பெருமையினை உணர்த்தும் வகையில் பாடுபடவேண்டும் என்று வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறியுள்ளார்கள்.

**அனைத்தும் பெண்ணினத்தின் அன்பளிப்பு:**

உயிரினங்களை உற்பத்தி செய்கின்ற பெரும் பொறுப்பினை இறையாற்றல் பெண்மையிடமே ஒப்படைத்து இருக்கிறது. உலகத்தின் மக்கள் தொகையில் ஆண்களும், பெண்களும் சரிபாதியாக இருப்பினும் அந்த ஆண்களையும் பெற்றெடுத்த பெருமை பெண்களேயாகும். இதனையே மகரிஷி அவர்கள் கீழ்க்கண்ட கவியில் அழகாக எடுத்துரைக்கிறார்கள்

**" எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திருவுள்ள மென்ன**
**எவ்வுயிரும் தோன்றுவதற்கு ஏற்றதொரு திருவழியாய்**
**வல்லமையாய் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே**
**வாழ்ந்துவரும் மக்களில் இவ்வளமறிந்தோர் எத்தனை பேர்?" (ஞா.வா.**319**)**

**(குணநலப்பேறும் சமுதாய நலனும், பக் 99)**

உலகம் செழிப்பதற்காக இறைநிலையே பெண்மையின் வடிவமாக வந்துள்ளது. அனைத்து உயிரையும் உருவாக்கி அவளது இரத்தத்தையே உணவாக அளித்து அன்புடன் அரவணைத்து வாழுகின்ற இயற்கையின் வெளிச்சச் சுடர் பெண்கள் எனில் மிகையாகாது.

இதனையே,

**" பெண் ணின்றேல் அகிலப் பிறப்பதில்லை;**
**பெண்ணை மதித்துக் கண்ணியம் காப்போம்;**
**கண்ணின் மணியெனப் பெண்ணை நினைத்து**
**மண்ணின் வளர்ச்சிக்கு வழி வகுப்போம்;**
**மண்ணின் மலர்களும் பெண்ணின் வகையே!**
**மென்மையும் நாற்றமும் கொண்டவை இவையே!**
**பண்ணின் இசைபோல பாங்குற்று விளங்கும்**
**பெண்ணின் நிலைதான் வெற்றிக்குத் துணையே!"**

என்கின்ற கவி உணர்த்துகிறது.

**( சிதறாத சிந்தனைகள், பக் 38)**

வரதட்சணை தேவையில்லை:

திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாக செவிவழக்கில் கேள்விப் பட்டுள்ளோம். ஆனால் வரதட்சனை என்ற ஒரு விஷயத்தினை முன்னிறுத்தி பல்வேறு திருமணங்கள் நிச்சயிக்கப் படுகின்றன. அந்த வகையில் பெண்களுக்கு ஏற்படக்கூடிய சமூகச் சிக்கல்களில் ஒன்று வரதட்சணை என்ற சீதனம் ஆகும். இதனால் பெண்ணின் பெற்றோர்களுக்கு ஏற்படும் துன்பங்களுக்கு அளவே இல்லை. இந்த கொடுமைகளை எல்லாம் குணத்தால் உயர்வு பெற்ற பெரியோர்கள் தவிர்க்க வேண்டும் என்பதனை மகரிஷி இக்கவி மூலமாக எடுத்துரைக்கிறார் கள்.

**" மணவினை நிகழும்போது மகள்தனைப்பெற்றோர் நின்று**
**கணவனென் றொருவனுக்குக் கையினில் நீரை வார்த்து**
**பணமதை ஈந்தோ பெற்றோ பலர் காணத் தத்தம் செய்வார்**
**நிலை கண்டோரும் இதை கொடுமையென் றெனண்ணவில்லை".**

**( வேதாத்திரியம், பக் 51)**

மகரிஷி கூறிய திருமண முறைகள்:

- தம்பதியர் இருவரும் மனம்விரும்பி ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- இருவருடைய பெற்றோர்களும் முழு மனதுடன் ஒப்புதல் தெரிவிக்க வேண்டும்.

- இதனை சமுதாயமும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட முறையில் திருமணம் நிச்சயிக்கப்பட வேண்டும்.

**திருமணத்தில் தேவையான மூன்று சடங்குகள்:**

- மணமக்கள் இருவரும் அவரவர் பெற்றவர்களுக்கு வணக்கம் செலுத்த வேண்டும்.
- மணமகன் மற்றும் மணமகள் இருவரும் தங்கள் சம்மதம் தெரிவிப்பதை ஒப்புதல் தெரிவித்து பத்திரம் பூர்த்தி செய்து கையெழுத்திட வேண்டும்.
- திருமணத்திற்காக தயாரித்து வைக்கப்பட்டுள்ள ஆவணத்தினை சபையோர் முன்னிலையில் சத்தமாகப் படித்து கையெழுத்து போட வேண்டும். இதற்கு முழு சம்மதம் அளிப்பதாக ஆவணத்தில் கையெழுத்திட்டு தம்பதியினரை வாழ்த்தி திருமண ஒப்புதலை தெரிவிக்க வேண்டும். திருமண புரோகிதரும் கையெழுத்திட்டு, சமுதாயத்தின் சார்பில் ஐந்து பேர் கையொப்பமிட வேண்டும். பிறகு மணமக்கள் மாலைமாற்றி அனைவரிடமும் வாழ்த்துக்களை பெறவேண்டும். பாதுகாப்பு கருதி அரசாங்க பதிவு செய்து கொள்ளலாம். இத்தகைய திருமணத்தில் எவ்வித வரதட்சனையும் இல்லை.

( **மனவளக்கலைஞன் மாத இதழ், பக்** 17 )

- இவ்வாறாக சீர்திருத்த நன்னெறி சார்ந்த திருமண முறையை வேதாத்திரி மகரிஷி எடுத்துரைத்துரைப்பதன் மூலமாக வேதாத்திரியம் பெண்னிற்கு அளித்துள்ள பெருமை புலப்படுகிறது.

.

**மனைவி நல வேட்பு விழா:**

உலகம் முழுவதும் உறவுகளை நினைவு கொள்ளும் வகையில் அன்னையர் தினம், தந்தையர் தினம், நண்பர்கள் தினம், குழந்தைகள் தினம் என பல்வேறு விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் மனைவிக்கு என எந்த ஒரு விழாவும் கடைப்பிடிப்பது இல்லை. மனைவியானவள் திருமணம் முடிந்த உடனே பிறந்தது முதல் கூடவே வாழ்ந்த பெற்றோர்கள், உடன்பிறப்பு மற்றும் சுற்றம் அனைத்தையும் பிரிந்துவந்து கணவனுடைய குடும்பத்திற்கு கடமையாற்றுவதற்கு தன்னை தியாகியாக மாற்றிக்கொண்டு புகுந்த வீட்டினை மேம்படுத்துவதற்காக தன்னால் இயன்ற அளவிற்கு உழைத்து. வருகிறாள். இத்தகைய தன்னலம் கருதாது பாடுபடும் தங்களது மனைவியை நன்றி உணர்வோடு மதிக்கும் வகையில் அவர்களுக்கு ஒரு விழா ஏற்படுத்தும் நோக்கில் மகரிஷி அவர்களால் உருவாக்கப்பட்ட விழா "**மனைவி நல வேட்பு விழா** "ஆகும் .

இந்த விழாவானது ஒவ்வொரு மனவளக்கலை மன்றங்களிலும் ஆகஸ்டு 30 ஆம் தேதியன்று மனைவி நல வேட்பு விழாவாக கொண்டாடடப்பட்டு வருகிறது.

விழாவின் துவக்கத்தில் தம்பதியர் ஒருவருக்கொருவர் நேராக அமர்ந்து கொண்டு இருவரும் மாலை மாற்றிக் கொள்வது கணவனும் மனைவியும் வலது கையோடு வலது கை இணைத்து வைத்து கொண்டு, ஒருவர் மற்றொருவர் கண்களைப் பார்த்துக் கொண்டே வாழ்க வளமுடன் என வாழ்த்து கூறி காந்தப் பரிமாற்றத்தினை பாவனையாக உணரச்செய்தல், அடுத்ததாக கணவன் மனைவியை பார்த்து மலர் போன்ற மென்மையான மனம் படைத்த தாங்கள் எனது மனைவியாக அமைந்த‌ததற்கு நான் புண்ணியம் செய்துள்ளேன். எனது வாழ்நாள் முழுவதும் உன்னை போற்றி பாதுகாப்பேன் என தன் கையில் இருக்கும் ஒரு மலரை கொடுக்க வேண்டும். பிறகு மனைவியானவள் ஒரு கனியை கையில் வைத்துக் கொண்டு இந்தக் கனி போன்ற கனிவான மனம் படைத்த தாங்கள் பழத்தில் உள்ள விதை முளைத்து மறுபடியும் மலர்ந்து பூவாக, காயாக, கனியாக மாறுவது போல தங்கள் குடும்பத்தில் எனை ஏற்று மலரச் செய்து சுவை நிறைந்த வாழ்வினை அளித்ததற்கு நன்றி உணர்வோடு இந்த கனியை தங்களுக்கு தருகிறேன் என்று கையில் உள்ள கனியை அளிக்கிறாள்.(ஆசிரியர் வழிகாட்டி, பக் 118)

பிறகு கணவன் தன் மனைவியை நோக்கி கீழ்க்கண்ட பாடலை கூறி வாழ்த்த வேண்டும்.

**" பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரை விட்டுப்**
**பிரிந்து வந்து பெருநோக்கில் கடமையறம் ஆற்றுப்**
**பற்றற்றத் துறவியெனக் குடும்பத் தொண்டேற்றுப்**
**பண்பாட்டின் அடிப்படையில் எனைப்பதியாய்க் கொண்டென்**
**நற்றவத்தால் என் வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை**
**நலநோக்கில் அன்போடு கருணையிவை கொண்டு**
**மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்**
**மனைவியை நான் மதிக்கின்றேன் வாழ்த்தி மகிழ்கின்றேன்".** **(ஞா.க. 475)**

**(சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், பக்** 99, 100)

தாய் சேய் நலம்:

மனித குலத்திற்கு உரிய ஒரு மதிப்புமிக்க விஞ்ஞானமே தாய் சேய் நலம் ஆகும். இதில் தாய் மற்றும் குழந்தையின் நலம் மட்டும் அல்லாது சமுதாய நலனும் உள்ளடங்கி இருக்கிறது. கருவுற்ற காலத்தில் தாயின் மனம் சோர்வடையாமல் மகிழ்வுடன் வைத்து கொள்ள வேண்டும். அந்த காலத்தில் பெண்ணிற்கு வருத்தமோ, பிணக்கோ ஏற்படச் செய்தோமானால், அதனுடைய தாக்கம் குழந்தையின் உடல், மனம் மற்றும் அறிவில் பாதிப்பினை ஏற்படுத்தி விடும். ஆரோக்கியமான குழந்தை வேண்டும் என்பது குடும்பத்தினரின் விருப்பமாக இருப்பினும் சமுதாய நலனும் இதில்

அடங்கி உள்ளது. தாய் சேய் நலத்திற்கான நல்ல பழக்க வழக்கங்கள் கொண்ட பண்பாடுகள் இந்திய சமுதாயத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் அதனை கடைப்பிடித்து வாழும் போது நல்ல தரமான குழந்தைகளை பெற்றெடுக்க முடியும்.

விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ந்து சிந்திக்கும் போது மரத்தின் மொத்த தன்மையும் வித்தில் அடங்கி இருப்பது போல தாயின் கருவில் அனைத்து குணங்களும் பதிவு பெற்று கரு வளரக்கூடிய காலங்களில் தாயினுடைய எண்ணம், மனப்போக்கு, செயல், அனுபோகம் ஆகியவை குழந்தைக்கும் பதிவாகிறது. ஆகவே நல்ல குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கு கருவுற்ற காலத்தில் தாயின் உடல் மற்றும் மனநலத்தில் அக்கறையோடு நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் நாளைய தலைமுறைகள் சிறந்து விளங்கி நல்ல சமுதாயம் மலர வேண்டுமெனில் தாய்சேய் நலத்தில் அக்கறை கொண்டு செயல்பட வேண்டும் என்ற மகரிஷியின் கூற்று அவரது சமூக நலத்தொண்டினை உணர்த்துகிறது.

**(மனவளக்கலைஞன் மாத இதழ், பக்** 15,16)

அகில உலக பெண்கள் ஆன்மீக கல்வி அறக்கட்டளை:

பெண்களின் முன்னேற்றத்தில்தான் குழந்தைகள், குடும்பம் மற்றும் சமூக முன்னேற்றமும் அடங்கிஉள்ளது. அதனால் பெண்ணினத்தின் பெருமையையும், சிறப்பையும் அனைவரும் உணர்ந்து போற்றிப் பாதுகாக்க வேண்டும். பெண்களுடைய முன்னேற்றத்திற்காக **“உலக சமுதாய சேவா சங்கம் அகில உலக பெண்கள் ஆன்மீக கல்வி அறக்கட்டளை”** ஒன்றை வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவி உள்ளார்கள். இதன் மூலமாக அனைத்து பெண்களும் உடல் மற்றும் மன நலத்திற்காக பயிற்சிகளையும், தத்துவ முறைகளையும் கற்று, தன்னை மேம்படுத்திக் கொண்டு பிறருக்கும் பயன் தருகின்ற வகையில் கடமையாற்றி வாழமுடியும் என்ற மகரிஷியின் சிந்தனை போற்றுதலுக்குரியது எனலாம்.

**(மனவளக்கலை தொகுப்பு மூன்று, பக்** 215)

பெண்மையைப் போற்றுவோம்:

இயற்கையான தெய்வம் தனது நுட்பமான அதிர்வு அலைகளாகிய காலத்தினைக் கொண்டு தானே வடிவமாகவும், குணமாகவும் பரிணமித்த நிகழ்ச்சிகளின் சிகரமே பெண்ணினத் தோற்றம். ஆகவே அவர்களை எவ்விதத்திலும் அவமதியாமல் பெருமைகாத்து வாழ்பவர்கள் இவ்வுலகத்தில் கடவுளென மதிக்கப்படுவார்கள் என்பதனை

**" பெண்ணினத்தை அவமதித்துப் பெருமை பெற நினைத்தவர்கள்**
**பெரும்பாவச் சுமையேற்றுப் பெற்ற துன்பம் உலகறியும்**
**எண்ணி எண்ணி பெண் பெருமை ஏற்றிப் புகழ்ந்தே எழுதி**
**இன்பமுற்றார் இவ்வுலகில் இறைவனைப்போல் என்று முள்ளார்"**

**என பெண்ணைப் போற்ற வேண்டும் என மகரிஷி கூறுகிறார்கள்"**

**( இந்த நூற்றாண்டு தந்த மகான், பக் 223)**

முடிவுரை:

பெண்ணினத்தின் பெருமையை பல்வேறு மகான்களும், சீர்திருத்தவாதிகளும் பல்வேறு காலக்கட்டங்களில் எடுத்து இயம்பி இருந்தால்கூட குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த காலம் முதல் இன்று வரையிலும் உலகம் பல்வேறு வகையில் முன்னேற்றம் கண்ட போதிலும் பெண்களுக்கான மதிப்பும், அங்கீகாரமும் இன்னும் கிடைக்கப் பெறவில்லை. குடும்பமாக இருப்பினும் நாடாகினும் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு தான் வாழவேண்டி இருக்கிறது. உலகம் முழுவதிலும் ஒளிமிக்க எதிர்காலம் வரவேண்டுமெனில் பெண்ணித்தை போற்றிப் பாதுகாக்க வேண்டும். அந்த வகையில் வேதாத்திரி மகரிஷி போற்றும் பெண்ணின் பெருமையை எடுத்து கூறி பெண்ணினத்தின் பேருண்மையை அனைவரும் உணர்ந்து கொண்டு, பெண்ணினத்தை பாதுகாத்து மண்ணின் உயர்விற்கு வழிவகுப்போம்.

சாண்றென் விளக்கம்:

1. கவிஞர் செந்தமிழ்ச் செழியன், இளங்கதிர் பொதுக் கட்டுரைகள், சக்தி பப்ளிஷிங் ஹவுஸ், பிப்ரவரி 2019 பக் 63
2. கவிதாயினி மணி அர்ஜுணன், மனம் விட்டுப் பேசலாம், மணி அர்ஜுணன் பதிப்பகம், முதற்பதிப்பு 2016, பக் 59
3. வேதாத்திரி மகரிஷி, மனவளக்கலைஞன் மாத இதழ், ஈரோடு கிளை செய்தி மடல், ஜனவரி 1986, பக் 2
4. வேதாத்திரி மகரிஷி, குணநலப்பேறும் சமுதாய நலனும், வேதாத்திரி பதிப்பகம், 2ம் பதிப்பு ஆகஸ்டு 2008, பக் 99
5. கவிதாயினி மணி அர்ஜுனன், சிதறாத சிந்தனைகள், விக்னேஷ் பிரிண்டர்ஸ், முதற்பதிப்பு 2010, பக் 38
6. வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரியம், வேதாத்திரி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு ஜூலை 2001, பக் 51
7. வேதாத்திரி மகரிஷி, மனவளக்கலைஞன் மாத இதழ், ஈரோடு கிளை செய்தி மடல், மார்ச் 1986, பக் 17
8. உலக சமுதாய சேவா சங்கம், ஸ்மார்ட் ஆசிரியர் வழிகாட்டி, வேதாத்திரி பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு, மே 2011, பக் 118
9 வேதாத்திரி மகரிஷி, சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், வேதாத்திரி பதிப்பகம், முதற்பதிப்பு 1998, பக் 99,100
10. வேதாத்திரி மகரிஷி, மனவளக்கலைஞன் மாத இதழ், ஈரோடு, ஜனவரி 1986, பக் 15,16

11. வேதாத்திரி மகரிஷி, மனவளக்கலை தொகுப்பு மூன்று, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, 22ம் பதிப்பு, ஜூன் 2019, பக் 215

12. அழகர் ராமானுஜம், “இந்த நூற்றாண்டு தந்த மகான்”, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, முதல் பதிப்பு, ஆகஸ்டு 2000, பக் 223.